பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

03 12 2021 7 15
வெள்ளிக்கிழமை இரவு

*தலைப்புச் செய்திகள்*

1) புதிய தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதில் இந்தியா முன்னிலை வகிக்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2) ஒமிக்ரான் பரவலை ஆரம்ப நிலையிலேயே தடுக்க மாநிலங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று சுகாதாரத்துறை செயலர் திரு. ராஜேஷ் பூஷன் வலியுறுத்தியுள்ளார்.

3) 2025-ஆம் ஆண்டுக்குள் நாடெங்கிலும் 10-ஆயிரத்து 500 மக்கள் மருந்தகங்களை திறக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

4) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அணை பாதுகாப்பு மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5) நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், முதல் நாளான இன்று இந்தியாவின் மயங்க் அகர்வால் 120 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

டிஜிட்டல் முறையிலான வங்கி சேவைகள் என்ற கனவு, குறுகிய காலத்தில் நனவாகியுள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நிதி சேவைகள் அமைப்பின் மாநாட்டை காணொலி காட்சி வாயிலாக இன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.

புதிய தொழில்நுட்பங்களை ஏற்று செயல்படுத்துவதில் இந்தியா முன்னிலை வகிப்பதாக அவர் கூறினார்.

நிதித் தொழில்நுட்பத் துறையில் ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாகவும், இத்துறையில் புரட்சியை ஏற்படுத்த வேண்டிய தருணம் இது என்று அவர் குறிப்பிட்டார்.

ரூபே, யு பி ஐ போன்ற பணபரிமாற்ற நடைமுறைகள் நிறைந்த பாதுகாப்பை வழங்குவதுடன், நம்பகத்தன்மையையும் மக்களுக்கு வழங்குவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்தார்.

<><><><><><><><>

கோவிட்-19-லிருந்து உருமாற்றம் பெற்ற ஒமிக்ரான் வைரஸ் பரவல் குறித்து, மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு. ராஜேஷ் பூஷண், மாநில கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் சுகாதாரத்துறை செயலர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், ஒமிக்ரான் அறிகுறிகளுடன் வெளிநாடுகளிலிருந்தும், மற்ற மாநிலங்களிலிருந்தும் வருவோரை கண்டறிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

சிவில் விமானப் போக்குவரத்துத்துறையில் ஏர்-ஸ்வைதா தகவல் தளத்தை அன்றாடம் பயன்படுத்தி, விமானப் பயணிகள் குறித்த தகவல்களை கண்காணிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஒமிக்ரான் பரவலை தடுக்க தீவிர கண்காணிப்பு அவசியம் என்று வலியுறுத்தியுள்ள மத்திய சுகாதாரத்துறை செயலர் கோவிட் மருத்துவ பரிசோதனைகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

தொற்று அறிகுறி உள்ளவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தனிமைப்படுத்துவதன் மூலம் நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

முதற்கட்ட பரிசோதனையில் நோய் அறிகுறி தென்பட்ட நபர்களை தனிமைப்படுத்தி, 72 மணி நேரத்திற்குள் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

கோவிட்-19 இரண்டுகட்ட தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டவர்களுக்கு ஒமிக்ரான் தொற்று பாதிப்பு குறைவாகவே இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அனைத்து பகுதிகளிலும் கோவிட் வழிகாட்டு நெறிமுறைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் ஒமிக்ரான் தொற்று பெரிய அளவில் வராமல் தடுக்க முடியும் என்றும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களுக்கு கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்கள் கூடுவதை முறைப்படுத்த வேண்டும் என்றும், எல்லா சமயங்களிலும் சமூக இடைவெளி பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் சுகாதாரத்துறை செயலர் திரு. ராஜேஷ் பூஷன் அறிவுறுத்தியுள்ளார்.

<><><><><><><><>

2025-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாடு முழுவதும் 10-ஆயிரத்து 500 பிரதமரின் மக்கள் மருந்தகங்களை திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் இன்று ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் திரு. மன்சூக் மாண்டவியா அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், கடந்த மாதம் 28-ஆம் தேதி நிலவரப்படி நாட்டில் 8-ஆயிரத்து 533 மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த மருந்தகங்களில் மக்களின் சிகிச்சைக்கு தேவையான ஆயிரத்து 450 மருந்துகளும், 240 அறுவை சிகிச்சைக்கு தேவைப்படும் கருவிகள் மற்றும் பொருட்களும், மிக குறைந்தவிலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<><><><><><><><>

நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிப்பதற்கான மசோதாவை கொண்டுவருவதற்கு அனைத்து கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த கருத்து அவசியம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சட்டத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, மக்களவையில் தாக்கல் செய்த எழுத்துப்பூர்வமான அறிக்கையில், பாலின ரீதியிலான சமூகநீதியை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளதாக கூறியுள்ளார்.

இந்த மசோதா ஏற்கனவே மூன்றுமுறை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு, பல காரணங்களால் அது நிறைவேற்ற முடியாமல் போனதையும் திரு. கிரண் ரிஜிஜூ சுட்டிக்காட்டியுள்ளார்.

<><><><><><><><>

மழைநீர் தேங்கிய இடங்களில் மீண்டும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் மழைநீர் தேங்குவதை தடுப்பது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழுவினருடன் இன்று அவர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது பேசிய அவர், வெள்ள பாதிப்பை தமிழக அரசு சிறப்பாக எதிர்கொண்டதாகத் தெரிவித்தார்.

வரலாறு காணாத அளவுக்கு பெருமழை பெய்ததை சுட்டிக்காட்டிய அவர், பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடிய திறன் தமிழக அரசுக்கு உள்ளது என்றும் கூறினார்.

நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

<><><><><><><><>

மாநில அரசுகளின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் அணை பாதுகாப்பு மசோதாவினை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று திமுக தலைவருமான முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராகவும், மாநில அரசின் அதிகாரங்களை பறிக்கும் விதத்திலும் உள்ள அணை பாதுகாப்பு மசோதாவை நிறைவேற்றியிருப்பது மத்திய – மாநில அரசுகளுக்கு இடையிலான உறவில் மிகப்பெரும் சறுக்கலை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<><><><><><><><>

உருமாறிய ஒமைக்ரான் தொற்று தமிழகத்தில் இதுவரை கண்டறியப்படவில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது தொடர்பான வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

<><><><><><><><>

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான விருதுகளை குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

இதில் சிறந்த மாநிலத்திற்கான விருது தமிழகத்திற்கும், சிறந்த மாவட்டத்திற்கான விருது சேலத்திற்கும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

<><><><><><><><>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுமண்டலம் புயலாக வலுவடைந்து வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து வடக்கு ஆந்திரா – தெற்கு ஒடிஸா கடற்கரையை நாளை காலை நெருங்கக்கூடும் என வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. புவியரசன் தெரிவித்துள்ளார்.

<><><><><><><><>

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், முதல் இன்னிங்ஸில் இந்தியா ஆட்ட நேர இறுதியில் 4 விக்கெட் இழப்பிற்கு 221 ரன் எடுத்தது.

மும்பையில் இன்று நடைபெற்ற முதல் நாள் ஆட்டத்தில், மயங்க் அகர்வால் ஆட்டமிழக்காமல் 120 ரன் எடுத்துள்ளார்.

விருத்திமன் சாஹா 25 ரன்னுடன் களத்தில் உள்ளார்.

**THE <><><><><><><><> END**